தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்: தஞ்சாவூர் மண்டலம்
தபால் பெட்டி எண்.69 சச்சிதானந்த மூப்பனார் ரோடு தஞ்சாவூர்–613001
தொலைப்பேசி எண்.04362–235321 மின்னஞ்சல். www.tncsc.gov.in

ந.க.எண்.சி2/011300/2022 நாள். 01.07.2022

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தஞ்சாவூர் முதுநிலை மண்டல மேலாளர் அவர்களால் தஞ்சாவூர் மண்டல கட்டுப்பாட்டில் இயங்கி வரும் நெல் சேமிப்பு கிடங்குகள் மற்றும் திறந்தவெளி சேமிப்பு மையங்களில் இருப்பில் வைக்கப்பட்டுள்ள நெல் மூட்டைகளை தனியார் நிறுவனத்தார் மூலம் பராமரிப்பதற்காக 1 டன்னுக்குரிய விலைப்புள்ளி விபரம் கோரி மூடிமுத்திரை இடப்பட்ட விலைப்புள்ளிகள் உரிய படிவத்தில் பூர்த்தி செய்து எதிர் வரும் 20.07.2022 அன்று மாலை 03.00 மணி வரை ஒப்பந்தபுள்ளி விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்ததாரர்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய பராமரிப்பு பணிகள் மற்றும் 1 டன்னுக்குரிய விலையினை குறிப்பிடப்பட வேண்டிய விபரம் கீழ்வருமாறு

தற்போது இருப்பில் இருக்கக்கூடிய தளவாடப் பொருட்களான சவுக்கு உருட்டுகள் மற்றும் தார்பாலின் ஆகியவற்றினை மட்டுமே தனியார் ஒப்பந்ததாரருக்கு கழகத்தால் வழங்க இயலும். அதற்கு மேலும் தேவைப்படக்கூடிய சவுக்கு உருட்டுகள் தார் பாய்கள் மற்றும் தேவையான அனைத்து உபகரணங்களையும் தனியார் ஒப்பந்ததாரர்களே கொள்முதல் செய்து கொள்ள வேண்டும்.

1) நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்படும் நெல்லினை சேமிப்பு கிடங்கு அல்லது திறந்தவெளி சேமிப்பு மையங்கள் வரை நெல் மூட்டைகளை எடுத்துச்செல்லவும், நெல்லினை தூற்றி சாக்குகளில் நிரப்பி சாக்குகளை தைத்து லாரிகளில் ஏற்றவும், இறக்கவும், சேமிக்கவும் மற்றும் போக்குவரத்து செலவினங்கள் உள்ளிட்ட அனைத்து பணிகளையும் மேற்கொண்டு சேமிப்பு கிடங்குகள் மற்றும் திறந்தவெளி சேமிப்பு மையங்களை பராமரிப்பதற்கான செலவுகள் மற்றும் அவைகளுக்குரிய வேலை ஆட்களுக்கான கூலி ஆகியவற்றினையும் தனியார் ஒப்பந்ததாரர்களே குறிப்பிட்டு பராமரிக்க வேண்டும்.
2) ஈரப்பதம் குறைத்து உலர் கலனில் போடப்பட்ட நெல்லினை 13– 14 சதவீதம் (%) வரை ஈரப்பதத்தில் நெல்லினை சேமித்தல் வேண்டும்.
3) தரையில் சிதறும் நெல் மணிகளை சுத்தம் செய்து சாக்குகளில் நிரப்பி வைத்து மீண்டும் அட்டியில் அடுக்கப்பட வேண்டும்.

4) கிழிந்த (அல்லது) சேதமடைந்த சாக்குகளில் உள்ள நெல் மணிகளை புதிய சாக்குகள் கொண்டு மீண்டும் அட்டியிட வேண்டும்.

5) உரிய கால இடைவெளியில் அட்டிகளில் மருந்து தெளித்து நெல் மூட்டைகளை பூச்சித் தாக்கத்திலிருந்து பாதுகாக்க வேண்டும்.

6) அட்டிகளில் மூடப்பட்டுள்ள தார் பாலின்களை அவ்வப்போது அகற்றி காற்றோட்டம் இடுதல் (Aeration) வேண்டும்.

7) சரியும் அட்டிகளை மறு அட்டியிடுதல் (Re stacking) வேண்டும்

8) நெல்லினை தரமாக பராமரித்தல் வேண்டும்.

9) தேவையான பணிகளுக்கு ஒப்பந்த பணியாளர்களை ஏற்பாடு செய்து பணி நிர்வகித்தல்.

கிடங்குகள் வாரியான நெல் தரையிருப்பு பற்றிய விபரம் மாற்றத்திற்குரியது. ஒப்பந்த படிவத்தினை இலவசமாக பதிவிறக்கம் செய்துகொள்வதற்கு இந்நிறுவன இணையதளம் www.tncsc.gov.in–ஐ பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/– நா.உமாமகேஸ்வரி,
முதுநிலை மண்டல மேலாளர்.

// ஆணைப்படி//

கண்காணிப்பாளர். 1/7/2022

நாள்.01.07.2022

ந.க.எண். சி2 / 011300 / 2022
நாள். 01.07.2022

முதுநிலை மண்டல மேலாளர் அலுவலகம்,
த.நா.நு.பொ.வா.கழகம் , தஞ்சாவூர்

## ஒப்பந்தப்புள்ளி படிவம்

தஞ்சாவூர் மண்டலத்தில் தற்போது நெல் இருப்பு வைக்கப்பட்டுள்ள சேமிப்பு கிடங்குகள் மற்றும் திறந்தவெளி சேமிப்பு மையங்களில் உள்ள நெல் இருப்பு விபரம் தஞ்சாவூர், கும்பகோணம் மற்றும் பட்டுக்கோட்டை அலகு வாரியாக கீழ்க்கண்ட அட்டவணையில் உள்ளவாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

| வ.எண் | சேமிப்பு கிடங்குகள் மற்றும் தி.வெ.சே.மையங்கள் பெயர் | குறுவை | சம்பா மெ.டன் | மொத்தம் மெ.டன் |
|---|---|---|---|---|
| | I.தஞ்சாவூர் அலகு | | | |
| 1 | அம்மன்பேட்டை நவீன அரிசி ஆலை கிடங்கு | 0 | 909 | 909 |
| | சேமிப்பு கிடங்குகள் | | | |
| 2 | சென்னம்பட்டி | 7107 | 17005 | 24112 |
| 3 | பிள்ளையார்பட்டி | 0 | 3000 | 3000 |
| 4 | புனல் குளம் | 5182 | 20294 | 25476 |
| 5 | மனையேறிபட்டி | 459 | 1825 | 2284 |
| 6 | டி.என்.டபில்யூ.சி தஞ்சாவூர் | 1498 | 2836 | 4334 |
| 7 | ஆர்சுத்திப்பட்டு | 0 | 0 | 0 |
| 8 | ஒரத்தநாடு (வேளாண்மை) கிடங்கு | 0 | 2926 | 2926 |
| 9 | காவாளிப்பட்டி | 1084 | 1650 | 2734 |
| | திறந்தவெளி சேமிப்பு மையங்கள் | | | |
| 10 | பிள்ளையார்பட்டி | 8165 | 32604 | 40769 |
| 11 | புனல்குளம் | 0 | 0 | 0 |
| 12 | கே.வி.கோவிலூர் | 482 | 10987 | 11469 |
| 13 | சென்னம்பட்டி | 3094 | 0 | 3094 |
| 14 | பருத்தியப்பர்கோவில் | 4783 | 15438 | 20221 |
| 15 | மனையேறிப்பட்டி | 0 | 0 | 0 |
| 16 | வளம்பகுடி | 893 | 0 | 893 |
| 17 | முனையம்பட்டி - 1 | 3555 | 23491 | 27046 |
| 18 | முனையம்பட்டி - 2 | 0 | 10675 | 10675 |
| 19 | ஒக்கநாடு (மேற்கு) | 4942 | 8757 | 13699 |
| 20 | உஞ்சியவிடுதி | 8368 | 8639 | 17007 |
| 21 | ஆர்சுத்திப்பட்டு | 0 | 7472 | 7472 |
| | கும்பகோணம் அலகு | | | |
| 22. | திருநாகேஸ்வரம் நவீன அரிசி ஆலை கிடங்கு | - | 507 | 507 |
| | சேமிப்பு கிடங்குகள். | | | |
| 23 | இரும்புதலை | 424 | 210 | 634 |
| 24 | சி.டபில்யூ.சி.(cwc) Kbk | 0 | 2667 | 2667 |
| | திறந்தவெளி சேமிப்பு மையங்கள் | | | |
| 25 | கொத்தங்குடி | 2623 | 3303 | 5926 |
| 26 | சன்னாபுரம் | 2380 | 5817 | 8197 |
| 27 | நீலத்தநல்லூர் | 2071 | 6563 | 8634 |
| 28 | புளிமங்கலம் | 0 | 3517 | 3517 |
| 29 | தண்டந்தோட்டம் | 66 | 0 | 66 |
| 30 | திருப்பனந்தாள் ஆதீனம் | 1769 | 10664 | 12433 |
| 31 | திருமண்டங்குடி சக்கரை ஆலை | 0 | 25404 | 25404 |
| 32 | இரும்புதலை | 894 | 0 | 894 |
| | பட்டுக்கோட்டை அலகு | | | |
| 33 | பட்டுக்கோட்டை நவீன அரிசி ஆலை | - | - | 0 |
| | சேமிப்பு கிடங்குகள் | | | |
| 34 | திட்டக்குடி | 382 | 11341 | 11723 |
| | திறந்தவெளி சேமிப்பு மையங்கள். | | | |
| 35 | அணைக்காடு | 2290 | 10679 | 12969 |
| 36 | விக்ரமம் | 2360 | 13240 | 15600 |
| 37 | கரம்பயம் | 3241 | 4495 | 7736 |
| 38 | நாட்டாணிகோட்டை | 747 | 9607 | 10354 |
| | | [illegible] | [illegible] | 345381 |

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தஞ்சாவூர் மண்டலத்தில் உள்ள சேமிப்பு கிடங்குகள் மற்றும் திறந்தவெளி சேமிப்பு மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ள நெல் அட்டிகளை கீழ்க்கண்டவாறு பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு 1 மெ.டன்னுக்குரிய செலவினத் தொகை எவ்வளவு என்பது குறித்து தஞ்சாவூர், கும்பகோணம் மற்றும் பட்டுக்கோட்டை அலகு வாரியாக உள்ள கிடங்குகள், திறந்தவெளி சேமிப்பு மையங்களுக்கான விலைப்புள்ளிகளை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்த விலைப்புள்ளிகள் எதிர் வரும் 20.07.2022 அன்று பிற்பகல் 3.00 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

தற்போது இருப்பில் இருக்கக்கூடிய தளவாடப் பொருட்களான சவுக்கு உருட்டுகள் மற்றும் தார்பாலின் ஆகியவற்றினை மட்டுமே தனியார் ஒப்பந்ததாரருக்கு கழகத்தால் வழங்க இயலும். அதற்கு மேலும் தேவைப்படக்கூடிய சவுக்கு உருட்டுகள், தார்பாலின்கள் மற்றும் தேவையான அனைத்து உபகரணங்களையும் தனியார் ஒப்பந்ததாரர்களே கொள்முதல் செய்து கொள்ள வேண்டும்.

| வ.எண் | மேற்கொள்ளப்பட வேண்டிய பணி விபரம் | ஒரு மெட்ரிக் டன்னுக்குரிய விலை ரூ.பை |
|---|---|---|
| 1) | நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்படும் நெல்லினை சேமிப்பு கிடங்கு அல்லது திறந்தவெளி சேமிப்பு மையங்கள் வரை நெல் மூட்டைகளை எடுத்துச்செல்லவும் நெல்லினை தூற்றி சாக்குகளை தைத்து லாரிகளில் ஏற்றவும், இறக்கவும், சேமிக்கவும் மற்றும் போக்குவரத்து செலவினங்கள் உள்ளிட்ட அனைத்து பணிகளையும் மேற்கொண்டு சேமிப்பு கிடங்குகள் மற்றும் திறந்தவெளி சேமிப்பு மையங்களை பராமரிப்பதற்கான செலவுகள் மற்றும் அவைகளுக்குரிய வேலை ஆட்களுக்கான கூலி ஆகியவற்றினையும் தனியார் ஒப்பந்ததாரர்களே குறிப்பிட்டு பராமரிக்க வேண்டும். | |
| 2) | ஈரப்பதம் குறைத்து உலர்கலனில் போடப்பட்ட நெல்லினை 13– 14 சதவீதம் (%) வரை ஈரப்பதத்தில் நெல்லினை சேமித்தல் வேண்டும். | |
| 3) | தரையில் சிதறும் நெல் மணிகளை சுத்தம் செய்து சாக்குகளில் நிரப்பி வைத்து மீண்டும் அட்டியில் அடுக்கப்பட வேண்டும். | |
| 4) | கிழிந்த (அல்லது) சேதமடைந்த சாக்குகளில் உள்ள நெல் மணிகளை புதிய சாக்குகள் கொண்டு மீண்டும் அட்டியிட வேண்டும். | |
| 5) | உரிய கால இடைவெளியில் அட்டிகளில் மருந்து தெளித்து நெல் மூட்டைகளை பூச்சித் தாக்கத்திலிருந்து பாதுகாக்க வேண்டும். | |
| 6) | அட்டிகளில் மூடப்பட்டுள்ள தார் பாலின்களை அவ்வப்போது அகற்றி காற்றோட்டம் இடுதல் (Aeration) வேண்டும். | |
| 7) | சரியும்அட்டிகளை மறு அட்டியிடுதல் (Re stacking) வேண்டும் | |

ஒப்பந்தப்புள்ளிகளுடன் அலகு வாரியாக தரையுயிருப்பு நெல் மதிப்பில் 10% டேவணி தொகையாக (Earnest Money Deposit (EMD)) வங்கி வரைவோலையாக (Demand Draft) ஏதேனும் ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் TNCSC, Thanjavur என்ற பெயரில் எடுத்து இணைத்து அனுப்ப வேண்டும்.

டேவணி தொகைக்குரிய வங்கி வரைவோலை இணைக்கப்படாத ஒப்பந்தபுள்ளிகள் நிராகரிக்கப்படும்.

ஒன்றுக்கும் மேற்பட்ட அலகிற்கு விண்ணப்பிக்கும் ஒப்பந்ததாரர்கள் ஒவ்வொரு அலகின் கீழ்வரும் சேமிப்பு கிடங்குகள், திறந்தவெளி சேமிப்பு மையங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ள நெல்லிற்குண்டாண 10% மதிப்பிற்குரிய டேவணி தொகையினை தனிதனியாக இணைத்து அனுப்பப்பட வேண்டும்..

மூடி முத்திரையிடப்பட்ட விலைப்புள்ளிகளை அளிக்கும் ஒப்பந்ததாரர் மேற்கண்ட முதல் பக்க அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ள அலகு வாரியாக சேமிப்பு கிடங்குகள் மற்றும் திறந்தவெளி சேமிப்பு மையங்கள் வாரியாக தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளிகளை அளிக்க வேண்டும்.

மூடி முத்திரையிடப்பட்ட விலைப்புள்ளிகள் 20.07.2022 அன்று மாலை 03.00 மணிக்குள் மண்டல அலுவலத்தை அடைய வேண்டும். பெறப்பட்ட விலைப்புள்ளிகள் அன்று மாலை 04.00 மணியளவில் முதுநிலை மண்டல மேலாளர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்படும் அலுவலர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

**ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்.**

1. ஒப்பந்ததாரர் கழகத்தால் தேவைப்படும் எண்ணிக்கையில் பணியாளர்களை பணியமர்த்த வேண்டும்.
2. தேவையாள பணியாளர்களை ஒப்பந்ததாரர் வழங்காத பட்சத்தில் கழகத்தால் பணியமர்த்தப்படும் பணியாளர்களுக்குரிய செலவுதொகை கணக்கிடப்பட்டு ஒப்பந்ததாரர்களுடைய பட்டியலில் பிடித்தம் செய்யப்படும்.
3. Pan Card நகல் சமர்ப்பிக்க வேண்டும்.
4. வெளியூரில் காசாக்கக்கூடிய கேட்பு வரைவோலையினை (DD) இணைத்து அனுப்பப்பட்ட ஒப்பந்தபுள்ளி (டெண்டர்) படிவங்கள் நிராகரிக்கப்படும். மேலும், இவ்வாறு செலுத்தப்பட்ட டேவணித்தொகை தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததாரர் கோரினால் காப்பு தொகையாக ஈடுசெய்துக்கொள்ளப்படும். டேவணித்தொகைக்கு வட்டி ஏதும் அனுமதிக்கப்படமாட்டாது.
5. டெண்டரில் கலந்து கொண்டு முடிவு செய்யும் காலத்திற்குள் டெண்டரில் இருந்து விலகி செல்லும் பட்சத்தில் டேவணித்தொகை பறிமுதல் செய்யப்பட்டு டெண்டர் நிராகரிக்கப்படும்.
6. வரையறுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை தஞ்சாவூர் முதுநிலை மண்டல மேலாளர் அலுவலகத்தில் ரூ.236/- GST வரி 18% உட்பட ரொக்கமாக செலுத்தி அலுவலக வேலை நாட்களில்

7. ஒப்பந்தபுள்ளிகள் உறுதியாக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தபுள்ளிதாரர் முதுநிலை மண்டல மேலாளர் அறிவிப்பு கிடைத்த 7 நாட்களுக்குள் நெல் இருப்பு மதிப்பில் 10% காப்புதொகையினை செலுத்தவேண்டும். மேலும், ரூ.100/- மதிப்புள்ள முத்திரை தாளில் ஒப்பந்தம் செய்து கொடுக்க வேண்டும். அவ்வாறு செய்யத்தவறினால், டேவணி தொகை பறிமுதல் செய்யப்படுவதும், அவரது செலவிலேயே மறு டெண்டர் கோரவும் அதனால் ஏற்படும் பாதிப்புகளுக்கும், நட்டத்திற்கும் ஒப்பந்ததாரர் பொறுப்பாக்கப்பட்டு அவர் ஈடுசெய்ய கோரப்படுவார் மற்றும் காப்புதொகை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தஞ்சாவூர் மண்டல அலுவலகத்தில் காசாக்கக்கூடிய தேசிய மயமாக்கப்பட்ட / வரையறுக்கப்பட்ட வங்கி வரைவோலை (Demand Draft ) மூலம் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். இக்காப்பு தொகைக்கு வட்டி ஏதும் கழகத்தால் அனுமதிக்கப்படமாட்டாது. இதர ஒப்பந்தத்திற்கான காப்புதொகை மற்றும் கழகத்தால் கொடுக்கப்படவேண்டிய நிலுவைதொகை ஏதேனும் இருந்தாலும் காப்பு தொகை சரிசெய்யப்படமாட்டாது.

8. தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் முறைப்படி காப்பு தொகை செலுத்தி ஒப்பந்த செய்து கொண்டபின் ஒப்பந்தவேலையில் ஒரு பகுதியோ அல்லது முழுமையாகவோ செய்ய தவறினால் காப்புதொகை செலுத்தியதை இழப்பு செய்வதுடன் அதன் தொடர்பாக கழகத்திற்கு ஏற்படும் நட்டத்திற்கும் முழு பொறுப்பாவார்

9. பராமரிப்பு பணியின்போது ஒப்பந்ததாரரின் பணியாளர்கள் பணிக்கு வரவில்லை எனில் உடனடியாக ஒப்பந்ததாரர் மாற்று ஏற்பாடு செய்து தேவையான பணியாளர்களை வழங்கிட வேண்டும்..

10. ஒப்பந்தப்புள்ளிகளில் ஏதேனும் குறைபாடு காணப்பட்டால் அவற்றை எவ்விதமான அறிவிப்புமின்றி நிராகரிக்க தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் முதுநிலை மண்டல மேலாளர் தஞ்சாவூர் அவர்களுக்கு முழு உரிமை உள்ளது. மேலும், டெண்டர் விதிமுறைகளை திருத்தவோ, நீக்கவோ மற்றும் தளர்த்தவோ தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் சென்னை மற்றும் முதுநிலை மண்டல மேலாளர் தஞ்சாவூர் அவர்களுக்கு உரிமை உள்ளது.

11. இந்த ஒப்பந்தபுள்ளி மற்றும் நியமனம் அதன் தொடர்பான விஷயத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் சென்னை மற்றும் முதுநிலை மண்டல மேலாளர் தஞ்சாவூர் ஆகியோரின் முடிவே இறுதியானது.

12. ஒப்பந்ததாரரால் வழங்கப்பட்ட விபரங்கள் சரியில்லை என்றும் மற்றும் பொய்யானது என்றும் பின்னர் தெரியவரின், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் சென்னை மற்றும் முதுநிலை மண்டல மேலாளர் தஞ்சாவூர் ஆகியோரால் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தம் எந்தவித அறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

13. டெண்டர் படிவம், டெண்டர் நிபந்தனைகளுக்கான சான்றிதழ் மற்றும் 10 % டேவணி தொகைக்கான DD யினை உறையிட்ட பெரிய கவரில் "நெல் சேமிப்பு கிடங்கு பராமரிப்பு பணி கே.எம்.எஸ்.2021–2022 ஒப்பந்தப்புள்ளி கோருதல்" என்று குறிப்பிட்டும், விலைப்புள்ளி படிவத்தை அதனுள் தனிகவரில் வைக்க வேண்டும். ஒப்பந்த நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளப்படாத பட்சத்தில் விலைப்புள்ளி கவர் திறக்கப்படாமலே நிராகரிக்கப்படும்.

**14. குற்றவியல் வழக்கு**

தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததாரர் குற்ற வழக்கில் சிறை தண்டனை அடைந்திருந்தாலோ, அல்லது அடைந்தாலோ மற்றும் குற்றவியல் வழக்கில் சம்பந்தப்பட்டு இருந்தாலோ அவரது ஒப்பந்தத்தை எவ்வித நிபந்தனை இன்றி ரத்து செய்ய தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் சென்னை மற்றும் முதுநிலை மண்டல மேலாளர் தஞ்சாவூர் ஆகியோருக்கு முழு உரிமை உண்டு.

ஒப்பந்தப்புள்ளிகள் உறுதியாக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததாரர் உள் குத்தகைக்கோ அல்லது ஒப்பந்தத்தை பிறருக்கு ஒதுக்கவோ கூடாது. அவ்வாறு கண்டறியப்பட்டால், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தத்தை ரத்து செய்ய தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் சென்னை மற்றும் முதுநிலை மண்டல மேலாளர் தஞ்சாவூர் ஆகியோருக்கு முழு உரிமை உண்டு.

15. குற்றவழக்கில் தொடர்புடைய மற்றும் கருப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டவரது மனைவியோ மற்றும் குடும்ப உறவினர்கள் நெல் சேமிப்பு கிடங்கு பராமரிப்பு பணி கே.எம்.எஸ்–2021–2022 டெண்டரில் பங்கேற்க இயலாது.

16. கழகத்தால் அவ்வப்போது விதிகப்படும் விதிகளுக்குட்பட்டு நெல்லினை தரமாக பராமரிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தம் கழக விதிகளின் படி ரத்து செய்யப்படும்.

இடம் ஒப்பந்ததாரரின் கையொப்பம்

நாள். பெயர் பெரிய எழுத்துக்களில்

முழு முகவரி

ஒம்/-நா.உமாமகேஸ்வரி,
முதுநிலை மண்டல மேலாளர்

// ஆணைப்படி//

1/7/2022